**பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பு -2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 ஆகஸ்ட் 10 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 10(ஈ) பந்தி மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

நம்பிக்கை பொறுப்பின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கவில்லை. அபிப்பிராயாயத்தை மறுப்பதற்கான அடிப்படை பந்தியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கை பொறுப்பின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நம்பிக்கை பொறுப்பினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்குகளை வைத்திருத்தல் மற்றும் நம்பிக்கை பொறுப்பு தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நம்பிக்கை பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகத்துடன் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளும் கணக்காய்வின் அடிப்படையில் நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயமொன்றை வெளியிடுதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடிந்திருக்கவில்லை.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | இணங்காமையுடன் தொடர்புடைய உரிய நியமம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் உள்ளக வீதிக் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 105,450,026 பெறுமதியினை காணி மற்றும் அபிவிருத்திப் பெறுமதிக்குச் சேர்த்து கணக்கீட்டு நியம இல. 7 இலுள்ள 50 ஆம் பந்திக்கு முரணாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பதில் கிடைத்திருக் கவில்லை. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஒத்த பண்பு ள்ள மற்றும் ஒத்த பாவனையுள்ள சொத் துக்கள் ஒரு தொகுதி யின் கீழ் கணக்கீடு செய்யப்படுதல் வேண் டும். |
| (ஆ) | கணக்கீட்டு நியம இல. 7 இலுள்ள 57 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 38,598,438 மொத்தக் கிரயமுடைய சுத்திகரிப்பு ஆலையிலுள்ள இயந்திர ங்கள் மற்றும் கட்டிடங்களை வெவ் வேறாக இனங்காணாது அனைத்துக்கு மாக 5 சதவீதம் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிரந்தமை அவதானிக்கப்ப ட்டது. | பதில் கிடைத்திருக் கவில்லை. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இயந்திரங் கள் மற்றும் கட்டிடங் களை வெவ்வேறாக இனங்காண்டு பெறுமா னத்தேய்வு செய்தல் வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,347,223 பெறுமதியுடைய தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கிரயத்தை விஞ்சி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தமையால் திரட்டிய பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு ரூபா | பதில் கிடைத்திருக் கவில்லை. | கணக்கீட்டு நியமத்தின் படி முழுமையாகத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந் தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக் |

| | | |
|---|---|---|
| 1,348,065 ஆகக் காணப்பட்டது. மேலும், கணக்கீட்டு நியம இல. 7 இலுள்ள 65 ஆம் பந்தியின் படி முழுமையாகத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர் ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களை இனங்கண்டு அவற்றை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | களை இனங்கண்டு அவற்றை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண் டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிற்கான ரூபா 828,000 பெறுமதியான கணக்காய்வுக் கட்டணங்களிற்காக பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட் டுள்ள போதிலும், தேவையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைத்திருக் கவில்லை. | கணக்காய்வுக் கட்ட ணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண் டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | நிதிக்கூற்று க்களின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கை யின் படி பெறுமதி | வேறுபாடு | முகாமைத்து வத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | 4 பேரேட்டுக் கணக்குகள் | 114,180,185 | 18,370,975 | 95,809,210 | பதில் கிடைத்திருக் கவில்லை. | நிதிக் கூற்றுக்களிற் கும் அறிக்கைளிற் கும் இடையே உள்ள பெறுமதி களை ஒப்பீடு செய்து வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரியான பெறுமதியை கணக் கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 3 பேரேட்டுக் கணக்கு மீதிகள் | 3,961,776 | 1,214,646,919 | 1,210,685,143 | பதில் கிடைத்திருக் கவில்லை. | நிதிக் கூற்றுக்களிற் கும் அறிக்கைளிற் கும் இடையே உள்ள பெறுமதி களை ஒப்பீடு செய்து வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரியான பெறுமதியை கணக் கீடு செய்தல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (இ) | 18 பேரேட்டுக் கணக்கு மீதிகள் | 346,406,831 | 0 | 346,406,831 | பதில் கிடைத்திருக் கவில்லை. | நிதிக் கூற்றுக்களிற் கும் அறிக்கைளிற் கும் இடையே உள்ள பெறுமதி களை ஒப்பீடு செய்து வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரியான பெறுமதியை கணக் கீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | 24 பேரேட்டுக் கணக்கு மீதிகள் | 2,289,828,473 | 0 | 2,289,828,473 | பதில் கிடைத்திருக் கவில்லை. | நிதிக் கூற்றுக்களிற் கும் அறிக்கைளிற் கும் இடையே உள்ள பெறுமதி களை ஒப்பீடு செய்து வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரியான பெறுமதியை கணக் கீடு செய்தல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்காக எழுத்துருவிலான சான்றுகள் இல்லாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | கிடைக்கப் பெறாத சான்று | முகாமைத்து வத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கட்டிடங்கள் | 1,688,741,540 | கட்டிடங்களை இனங்காண்பத் கான தகவல்கள் | பதில் கிடைத்திருக் கவில்லை. | நிலையான சொத்துக் களை வெவ்வேறாக இனங்காண்பதற்கு இயலுமான விதத்தில் தகவல்கள் பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நிலையான வைப்புக்களிற் காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் | 22,484,737 | புதுப்பித்தல் அறிவித்தல் | பதில் கிடைத்திருக் கவில்லை. | புதுப்பித்தல் அறிவித்தல்கள் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். |
| (இ) | சில்லறைக் காசு செலவினம் | 347,273 | சிட்டைகள் | பதில் கிடைத்திருக் கவில்லை. | சில்லறைக் காசின் மூலமான கொடுப்பனவு களிற்குரிய சிட்டைகள் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுடன் சமர்ப்பிக் கப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | தற்காலிகமாக பிடித்துவைக்கப் பட்ட வைப்பு கள் | 5,550,000 | மீதி உறுதிப்படுத் தல்கள் | பதில் கிடைத்திருக் கவில்லை. | மீதிகளை உறுதிப்படுத் துவதற்கான ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய தொகைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 5 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக கடற்றொழில் கூட்டுத் தாபனத்திடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 17,402,781 மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைத்திருக் கவில்லை. | நீண்டகாலமாக அறவி டப்பட வேண்டியுள்ள மீதியை அறவிடுவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 74,943,431 தொகையான நிலுவை வாடகை வருமான மீதியில் 10 ஆண்டு காலமாக நிலவுகளின்ற நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடி க்கை எடுக்கப்படாததுடன், முறை யான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப் படாமையால் 2011 முதல் 2020 ஆம் ஆண்டு வரையான ஒவ்வொரு ஆண்டின் போதும் நிலுவையான வருமானம் எவ்வளவு என்பதனை இனங்காண முடிந்திருக்கவில்லை. மேலும், 2013 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான நிலுவை வாடகை வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டுள்ள ரூபா 3,605,683 கூட்டுத்தொகையான மீதியிலிருந்து அறவிடப்பட்டுள்ள தனிப்பட்ட கடன்பட்டோரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. | பதில் கிடைத்திருக் கவில்லை. | நீண்டகாலமாக அறவி டப்பட வேண்டியுள்ள மீதியை அறவிடுவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத் தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | | **ரூபா** | | |
| (அ) | 2010 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய நம்பிக்கை பொறுப்பின் உடன்படிக்கை | | | |
| | (i) 6(அ) 1 ஆம் பந்தியின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பின் அனை த்து மிகை பணத்தையும் திறைசேரி உண்டியல்கள் | 208,108,367 | பதில் கிடைத் திருக்கவில்லை. | நம்பிக்கைப் பொறுப்பு ஸ்தா பிக்கப்படுகையி ல் ஏற்படுத்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் அரச பிணைப்பத்திரங்கள் தவிர்ந்த வேறு வழியில் முதலீடு செய்வதற்கு திறைசேரியின் எடுத்துமூல முன்கூட்டிய இணக்க ப்பாடு பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான இணக்க ப்பாடு இல்லாது நம்பிக்கை பொறுப்பு சபையின் தீர்மானத்தின் பிரகாரம் மாத்திரம் இரண்டு அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட் டிருந்தது. | | | ப்பட்ட உடன் படிக்கையின் 6(அ)1 இன் பிரகாரம் நடவ டிக்கை எடுக்க ப்படுதல் வேண் டும். |
| (ii) | 8(ஊ) ஆம் பந்தியின் பிரகாரம் சம்பளம், கொடுப்பனவு அல்லது பரிசு பணமாக ஏதேனும் வேதனத்தை பெறுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்களு க்கு உரிமை இல்லையென்று குறிப்பிட்டிருப்பினும் அது தொடர் பாக கருத்திற் கொள்ளப்படாது நம்பிக்கை பொறுப்பு சபைக்காக முதலாவது நபர் என பெயரிடப் பட்ட நம்பிக்கை பொறுப்பு சபையின் தலைவரான கடற் றொழில் அமைச்சின் செயலாள ருக்கு 2020 ஆம் ஆண்டின் 09 மாத காலத்திற்காக மாதாந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந் தது. | 315,000 | பதில் கிடைத்திருக் கவில்லை. | நம்பிக்கைப் பொறுப்பு ஸ்தா பிக்கப்படுகையி ல் ஏற்படுத்த ப்பட்ட உடன் படிக்கையின் 8(ஊ) இன் பிரகாரம் நடவ டிக்கை எடுக்க ப்படுதல் வேண் டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நிதிப் பிரமாணம் 261(1) இன் பிரகாரம் காசுப் புத்தகமும் உறுதிச்சீட்டுக்களும் தயாரிக்கப்படாததுடன் நிதிப்பிரமாணம் 446(2) இன் படி காசுப் புத்தகத்தின் பதிவுகள் மற்றும் மீதிகள் சரியானவை என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | பதில் கிடைத்திருக் கவில்லை. | நிதிப் பிரமாண ங்களின் பிரகா ரம் செயற்படு தல் வேண்டும். |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரித்து பேணப்பட்டிருக்கவில்லை. | | பதில் கிடைத்திருக் கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரித்து பேணப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் I ஆம் பகுதியின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிப் பிரமாணம் 876(3) ஆம் பந்தியின் பிரகாரம் நியதிச்சட்டம் சாராத ஏதேனும் நிதியமொன்றை தொடர்ந்தும் பேணிச் | | பதில் கிடைத்திருக் கவில்லை. | நிதிப்பிரமாணத் தின் பிரகாரம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நியதிச் சட்ட நிறுவன மாக மாற்றுவத ற்கு நடவடி க்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | செல்வதற்கு நியாயமான காரணம் காணப்படின் அவ்வாறான நிதியங்களை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் சட்டமாக்குவதற்கு ஏற்ற வகையில் உரிய காரணங்களைக் காண்பித்து பொது நிதித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நம்பிக்கைப் பொறுப்பை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நியதிச்சட்ட நிறுவனமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | எடுக்கப்படுதல் வேண்டும். |
| (உ) | 2013 இன் 17 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் 10 ஆம் உறுப்புரையின் படி மீளாய்வாண்டில் குத்தகை வாடகை வருமானத்திற்கு பெறுமதிசேர் வரியைச் செலுத்துவதற்காக பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 84,829,967 | பதில் கிடைத்திருக்கவில்லை. | சட்டத்தின் படி பெறுமதிசேர் வரியைச் செலுத்துவதற்காக பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 40,748,885 இலாபமொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 1,603,164 ஆக காணப்பட்டதனால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 39,145,721 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. திறைசேரியிலிருந்து மாற்றப்பட்ட ரூபா 50,000,000 நிதியினை வருமானமாக கணக்கீடு செய்திருந்தமையே நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்துக்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குகள் குறித்த பகுப்பாய்வு

| வருமானத்தின் போக்கு | 2020 | 2019 | சதவீதம் | அவதானிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | |
| திறைசேரியிலிருந்து நிதியங்களை மாற்றுதல் | 50,000,000 | - | - | திறைசேரியிலிருந்து மாற்றப்பட்ட நிதியங்கள் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் வருமானம் அதிகரித்திருந்தமை. |
| குத்தகை வாடகை வருமானம் | 84,829,967 | 99,946,000 | 15% | வருமானச் சேகரிப்பு உரியவாறு இடம்பெற்றிருக்காமை. |
| வாகன நிறுத்துமிட வருமானம் | 5,326,509 | 4,085,961 | 30% | வாகனங்கள் வளாகத்தினுள் நிறுத்தி வைக்கப்படுகின்ற கால அளவிற்கு கட்டணம் அறவிடல் முறைமையொன்று தீர்மானிக்கப்பட்டிருந்தமையும் அதன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பிரகாரம் கணினி மென்பொருளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும். |
| **செலவினக் குறைவு** | | | | |
| நீர்க் கட்டணம் | 5,814,229 | 8,017,435 | 27% | கொவிட் நோய்த்தொற்று காரணமாக நீர்ப்பாவனை குறைவடைந்திருந்தமை. |
| பராமரிப்புச் செலவினம் | 3,187,040 | 3,762,635 | 15% | முன்னைய ஆண்டை விட பராமரிப்பு செலவு குறைந்தமை |
| சுத்திகரிப்பு மற்றும் பேணுகைச் செலவினம் | 20,340,856 | 22,878,366 | 11% | கொவிட் நோய்த்தொற்று காரணமாக சில மாதங்கள் நிறுவனம் மூடப்பட்டிருந்தமை |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டு ஏறத்தாழ 6 ஆண்டுகள் ஆன போதிலும், நம்பிக்கைப்பொறுப்பின் முகாமையாளர், கணக்காளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிகளிற்காக 2020 திசெம்பர் 31 வரையிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்தை அங்கீகரித்துக் கொண்டு ஆட்ரேப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைத்திருக்கவில்லை. | ஆட்சேர்ப்புத் திட்டத்தை அங்கீகரித்துக் கொண்டு ஆட்ரேப்புச் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் ஒழுங்குவிதிகள் கோவையின் I ஆவது தொகுதியின் IX ஆவது அத்தியாயத்தின் 120 ஆம் பந்தியின் படி அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் ஒரு பதவியில் பதிற்கடமை ஆற்றுவதற்காக அவர் தற்போது வகிக்கின்ற பதிவியிலும் பார்க்க உயர் பதவிக்கு அல்லது சமாந்தரமான பதவிக்கே நியமிக்கப்பட முடியுமான போதிலும், கணக்காளர் பதவியில் பதிற்கடமை ஆற்றுவதற்காக கடற்றொழில் அமைச்சின் செயலாளரினால் பிரதான கணக்காளர் நியமிக்கப்பட்டு மீளாய் வாண்டின் போது ரூபா 360,000 நம்பிக்கைப் பொறுப்பினால் செலுத்தப் பட்டிருந்தது. | பதில் கிடைத்திருக்கவில்லை. | தற்போது வகிக்கின்ற பதிவியிலும் பார்க்க உயர் பதவிக்கு அல்லது சமாந்தரமான பதவி க்கு மாத்திரமே பதியொன்றில் பதிற்கடமைக்காக நியமிக்கப்பட முடியும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வர்த்தக கட்டிடத் தொகுதி ஸ்தாபிக் கப்பட்டுள்ள 3.1776 ஹெக்டயர் விஸ்தீரணமுடைய காணியானது காணிகள் கையேற்புச் சட்டத்தின் கீழ் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத் திடமிருந்து பெறப்பட்ட காணியாகும். மேற்படி காணியில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,742,461,943 தொகையும் 2020 ஆம் ஆண்டில் வீதிக் கட்டமைப்பை நிர்மாணிப்பதற் காக ரூபா 105,450,026 தொகையும் என்ற வகையில் மொத்தம் ரூபா 1,847,911,969 செலவிடப்பட்டுள்ளது. அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ள காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைத்திருக் கவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் படி வர்த்தக கட்டிடத் தொகுதி அமைந்து ள்ள காணியினை நம்பிக்கைப்பொறுப் பிற்கு கையேற்றல் வேண்டும். |
| (ஈ) | 2016 மே 17 ஆந் திகதி இடம்பெற்ற நம்பிக்கைப் பொறுப்பின் முகாமைத்து வக் கூட்டத்தில் வாகன நிறுத்தகத்திலிருந்து நம்பிக்கைப் பொறுப்புக்கு கிடைக்க வேண்டியுள்ள வருமானம் திருத்தப்பட வேண்டு மென்றும், தேறிய வருமானத்தில் 50 சதவீதம் நம்பிக்கைப் பொறுப்புக்கு கிடைத்தல் வேண்டுமென்றும் தீர்மானி க்கப்பட்டிருந்த போதிலும், நம்பிக்கைப் பொறுப்பினால் அந்த உடன்படிக் கையினை திருத்துவதற்கு நடவடி க்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைத்திருக் கவில்லை. | உடன்படிக் கையினை திருத்தி தேறிய வருமானத் தில் 50 சதவீத த்தை நம்பிக்கைப் பொறுப்புக்கு பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (உ) | மோட்டார் வாகன வருமானத்தை சேகரிக்கின்ற ஒப்பந்தக் கம்பனியால் வாகன நிறுத்தகத்திற்காக 18 இற்கும் 21 இற்கும் இடைப்பட்ட ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போததுடன், ஒவ்வொரு மாதமும் ரூபா 100,000 மற்றும் ரூபா 50,000 வீதம் சம்பளம் செலுத்தப்பட்டிருந்த ஊழியர்களும் காணப்பட்டமையால் நிறுத்தகத்தின் வருமானத்தைக் கணிப்பிடுகையில் பாரியதோர் தொகை சம்பளமாக வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த ஊழியர்கள் வளவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனரா என்பது குறித்து கண்காணிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டதன் பின்னர், குறித்த கம்பனி யின் செயற்பாடுகளை கண்காணிக்கும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்ப டுவதாக அறிவிக்கப்பட் டுள்ளது. | செயற்பாடுகளை கண்காணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப டுவதனை உறுதிப் படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2019 ஒக்தோபர் 17 ஆந் திகதிய நம்பிக்கைப்பொறுப்பு முகாமைத்துவ கூட்டத்தில் 3 குளிரூட்டல் அறை களையும் பணிக்கட்டிகளை வெட்டும் இயந்திரத்தையும் திருத்தியமைத்து பேணிச் செல்வதற்கும் புதிதாக பணிக்கட்டி அறையொன்றை நிர்மாணித்து பேணிச் செல்வதற்குமான ஒப்பந்தம் தொடர்பில் எதிர்வரும் 5 ஆண்டுகளிற்காக உடன்படிக்கை ஒன்றை தயாரித்தல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான உடன்படிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைத்திருக் கவில்லை. | உடன்படிக்கை யொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | கழிவுநீரை சுத்திகரித்து விடுவிக்கும் இயந்திரகூடமொன்று (Treatment Plant) 2010 ஆம் ஆண்டில் ரூபா 38,598,438 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும், சாத்தியக்கூற்று ஆய்வொன்றை மேற்கொண்டு குறித்த இயலளவுக்கு அமைய உரிய திட்டத்தின் படி அது நிர்மாணிக்கப் பட்டிருக்காமையால் கழிவுநீரை சுத்திகரித்து விடுவிக்கும் செயல்முறை உரியவாறு இடம் பெற்றிருக்காமை காரணமாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் 2014 மார்ச் 18 ஆந் திகதி சமர்ப்பிக்கப் பட்டிருந்த போதிலும், சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக மீளாய்வாண் டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய இயந்திரகூடமொ ன்றை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2021 யூன் 15 ஆந் திகதி பூரணப்படுத்துவதற்கு உத் தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அதன்படி குறித்த சுற்றா டல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக நடவ டிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது. | புதிய இயந்திர கூடத்தை நிர்மா ணிக்கும் பணி களை துரிதப்ப டுத்தி சுற்றாடல் பாதுகாப்பு அனு மதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வ தற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 154 கடைத் தொகுதிகளுடன் நிர்மாணிக்கப் பட்டுள்ள மொத்த வியாபார கட்டிடத் தொகுதிக்கு மேலதிகமாக 128 கடைத் தொகுதிகளுடன் கூடிய சில்லறை வியாபார கட்டிடத் தொகுதியொன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அந்த சில்லறை கட்டிடத் தொகுதியிலுள்ள 64 கடைகள் 2012 ஆம் அண்டில் ரூபா 9,625,540 செலவில் மொத்த வியாபார ஸ்தளங்களாக மாற்றப்பட்டிருந்தன. கணக்காய்வுத் திகதியான 2020 திசெம்பர் 31 வரையிலும் அந்த கட்டிடத் தொகுதியிலுள்ள அனைத்து சில்லறை வியாபார நிலையங்களும் மாற்றப்பட்டிருந்த மொத்த | பதில் கிடைத்திருக் கவில்லை. | அனைத்து வியா பார நிலையங்க ளையும் வர்த்தக நடவடிக்கைகளிற் காக பயன்படுத்தி அதற்காக வணிக த்திட்டமொன்றும் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

வியாபர ஸ்தளங்களும் வர்த்தக நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படாதிருந் ததுடன் வணிகத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட் டிருக்கவில்லை.

**3.3 கொள்வனவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குத்தகைக்கு எடுத்தோரால் குத்தகை உடன்படிக்கைக்கு முரணாக நம்பிக்கைப் பொறுப்புக்கு வர்த்தக நிலையங்களை கையளிக்காது வேறு தரப்பினர்களிற்கு கையளிக்கப்பட்டுள்ளமை சம்பந்தமாக நம்பிக்கைப் பொறுப்பு முறைப்படி நடவடிக்கை எடுத்திருக்காமையால் 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 1.2.1(அ), (ஆ) மற்றும் (இ) வழிகாட்டல்களிலிருந்து விலகிச் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதில் கிடைத்திருக் கவில்லை. | கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் படி செயற்படுதல் வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பந்தியின் படி கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களிற்குள் நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று பொது நிதித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துக்கான பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 04 மாதங்கள் தாமதிக்கப்பட்டு 2021 யூலை 19 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் கிடைத்திருக் கவில்லை. | நிதிப்பிரமாணத் தின் படி நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொ ன்று சமர்ப்பிக்கப் படுதல் வேண் டும். |